Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ]   யாழ்ப்பாணம்:-   மன்மத ஞு ஆவணி மீ கஎ உ வெள்ளிக்கிழமை (2 SEPT. 1955)   [இல- உ]

## தீக்கைச் சிறப்பறியும் தீவிர மறுமலர்ச்சி

———0-0———

## உண்மை உணர்ந்த உன்னத வாழ்க்கைக்கு வழி

———0———

தீட்சையாவது ஞானத்தைக் கொடுத்து பாசத்தைக் கெடுப்பது என்பது பொருள். அறம்பாவமென்னும் அருங்கயிற்றால் கட்டப்பட்டிருக்கிற ஆன்மா ஞானம் கைவரப்பெற்று விடுதலை அடைவதற்கே தீட்சை எழுந்தது. தீட்சையில் பல பிரிவுண்டு. சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சையெனவும், நயனம் பரிசம் மானதம், வாசகம். சாத்திரம், யோகம், ஔத்திரி எனவும் தீட்சையைப் பிரிக்கலாம் இக் கட்டுரையில் ஆராய எடுத்துக்கொண்ட விஷயம் சமய தீட்சையாகும். சமய தீட்சைக்குப் பிரவேசதீட்சையெனவும் பெயருண்டு. சமயாதீதப் பழம் பொருளைக் கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும் கருத்தை வளர்ப்பதற்கே சைவ சமயத்திற் பிரவேசிக்க சமயதீட்சையை ஒவ்வொரு சைவரும் பெறவேண்டும். சமய தீட்சையைப் பெற்றவருக்கே சைவன் என்று கூற உரிமையுண்டு. சமய தீட்சை பெற்றவருக்கே பஞ்சாட்சரம் செபிக்க உரிமையுண்டு.

தற்போது தீட்சைபெறுபவர்கள் அருகிவிட்டனர் தீட்சைபெற்று திரிபுண்டரமாக விபூதி தரித்தல் வீண் நேரப்போக்கென்று கருதுபவர் ஒரு சாரார் இப்போதுளர். இப்படிச் செய்வதெல்லாம் முற்காலத்திலுள்ள அநாகரிக மககள் காட்டிய காரியமென்று கூறும் மற்றொரு சாரார் மற்றொருபக்கமுண்டு. வேதாகமங்கள் மனிதரால் எழுதப்பட்டன, அவற்றில் கூறியபடியாக எல்லாச் சைவர்களும் ஒழுகுகிறார்களா? என்று கேட்பார் ஒருபக்கமுண்டு. தீட்சைபெற்று எமது மனதைக் கட்டுப்படுத்த முடியாது; எம்மால் மாமிசம் உண்ணுமலிருக்க முடியாது என்று கூறும்சாரார் ஒரு பக்கமுள்ளார். தீட்சைபெற்று விபூதி அணிந்து அனுட்டானம் செய்வதெல்லாம் தேவையில்லை மனம் சுத்தமாக இருந்தால் போதுமானது என்று சமாதானம் கூறுபவர்கள் அநேகர் உள்ளார்கள். இங்ஙனம் பலவிதமான நிலை

ஆசிரியர்

திரு. செ. சின்னத்துரை B. A.

குழம்பின சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. நமது நாடு சுமார் ஐஞ்ஞூறு வருஷங்களாக மாறிமாறி அந்நியரின் அடிமைத் தளையில் அகப்பட்டுத் திக்கற்று பொருளல்லாதனவற்றைப் பொருளென மதிக்கும்படியாகப் பழக்கப்பட்ட காரணத்தாலன்றோ ஆங்கில மோகம்படைத்த வாலிபர்களும் மேலைத் தேசவாழ்க்கையின் வெளிப்பகட்டான ஆடம்பரமான விஷயங்களில் மனதையும் பொருளையும் நேரத்தையும் போக்குகிறவர்களும்தான் சைவ அனுட்டானத்திலே வெறுப்புக்காட்டுகிறார்கள். விபூதி பூச வெட்கப்படும் வாலிபர் அநேகர் இருக்கிறார்கள்— விபூதியைப் பூச வெட்கப்படும் மாணவர்களிருப்பார்களானால் தீட்சை பெற்று விபூதியை மூன்று குறிகளாகத் தரிக்கக் கூசுபவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆங்கிலம் படித்த சில சைவவாலி

தொடர்ச்சி 3ம் பக்கம்

## திருக்கேதீச்சரத் திருப்பணி அறிக்கை

———:0:———

### சபையின் ஆண்டுக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது

(திருக்கேதீச்சரஆலயத் திருப்பணிச் சபை 21—8—55 இல் நடைபெற்றது)

**கோவில்கட்டுமானத் திருப்பணி**

கோவிலமைப்பைக் குறிக்கும் விஷயம்பற்றிச் சபையின் நிர்வாகசபையும், கட்டிட-உபசபையினரும் திருக்கோவிலமைப்பில் விசேஷ அறிவுள்ளவர்களோடு கலந்து விரிவாக ஆராய்ச்சி புரிந்து வந்தனர். இவ்வாறு ஆலோசனை கூறி உதவி புரிந்த பெரியார்களுள், விசேஷமாக சித்தாந்த சரபம் காசிவாசி பழனி ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார் சுவாமிகள் அவர்களுக்கும் யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுக்கும் இச்சபையின் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்பெரியார்களின் கண்காணிப்பிலே ஆகம விதிகளுக்கமைவாக திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார், திரு. வைத்திய ஸ்தபதியார் ஆகிய இரு சகோதரர்களும் திருக்கேதீஸ்வர ஆலய அமைப்புப் படத்தை வரைந்துதவினர்.

கையில் சேர்ந்த பணத்தைக் கொண்டு திருப்பணிவேலையை ஆரம்பித்தோம். ஆயினும் போதிய பணம் வந்து சேராதமையினால் வேலைகளைத் தொடர்ந்து நடாத்த இயலாமற் கஷ்டப்படநேர்ந்தது. இதுவும் எம்பெருமானின் திருவிளையாடலகளுள் ஒன்றெனத் தாழ்மையுடன் சிரமேற் கொண்டோம். ஆனால் இச்சமயம் திருப்பணி வேலைகள் மேலும் நடந்துகொண்டிருக்கின்றன என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இன்றுவரை இச்சபையில் 805 அங்கத்தவர்கள் உளர். சைவ நன்மக்கள் அனைவரும் அங்கத்தவர்களாகவேண்டும் என்பது எமது பேரவா.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பல்வேறு அங்கங்களையும பரிவார கோயில்களையும் பின்வரும் சைவப் பெருந்தகையாளர்கள் தத்தம் நிதிகொண்டு கட்டியுதவ உறுதி கூறியுள்ளார்களென மிக நன்றியுடன் தெரிவிக்கின்றோம். அவை பினவருமாறு:—

1 சுவாமி கோயிலை, கொழும்பு பழைய புதிய கதிரேசன் கோயில்களைப் பரிபாலனம் செய்துவரும் செட்டியார் வமிச கோத்தார்களும.

2 அம்பாள் கோயிலை, மலாய் நாட்டில் வசிக்கும் சைவ மக்களும்.

3 பிள்ளையார் கோவிலை, மன்னார் பிரதேச வாசிகளான இந்து ஒவசியர்மார்களும.

4 ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவிலை, இச்சபையின் உபதலைவர்களுள ஒருவரும தர்மகர்த்தாக்களில் ஒருவருமாகிய திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்களும் அவர்களது பந்துக்களும.

5 மகாவிஷ்ணு கோயிலை கொழும்பிலுள்ள இலங்கை ரெட்டியார் சங்கமும்.

6 பதினையாயிரம் ரூபா செலவில் வசந்த மண்டபம கட்டும்பணிக்கு காலஞ்சென்ற சிறுப்பர் திருவாளர் சி. ஞான

தொடர்ச்சி 5ம் பக்கம்

## அகமார்க்கமும் அதன் பயனும்

———o———

### அதை அடைதற்குச் சிறந்த சாதனம்

மார்க்கம் என்பது வழி. தெருவால் போகும் ஒருவரை நீர் எந்தமார்க்கத்தால் செல்கின்றீர் எனக் கேட்குங்கால் அவர் தம கையை நீட்டி இந்த மார்க்கத்தால் செல்கின்றேன் என்பர். மக்களாகப் பிறந்த நாமடையவேண்டியது கடவுளின் திருவடிகளையே அத் திருவடிகளையடைவதற்கு மனிதன் தான் தனது உற்றார் உறவினருடன் பழகியவண்ணமாக ஒரு மார்க்கத்தை வகுத்து அதற்கேற்ப ஒழுகி வருகின்றான்.

சைவ மார்க்கத்துச் சமயாசாரியருள் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளும் தாம்பாடிய தீந்தமிழ் மாலையாகிய தேவாரத்தில் இறைவனை "அப்பன் நீ அம்மை நீ .... .... [illegible] புடைய மாமனும் [illegible] நீ" என்று உலக முறை கூறிப்பாடுகின்றார். கடவுளைத் தந்தைதாய்போலவும் தான் அக்கடவுளின் பிள்ளை போலவும் பாவித்து வணங்கும் முறையைப் புத்திரமார்க்கம் என்பர். திருஞானசம்பந்தப் பிள்ளை இந்த மார்க்கத்தைச் சார்

ஸ்ரீமான்

க. வேலுப்பிள்ளை அவர்கள்

ந்தவர். அவர் ஒழுகிய முறையும் அவருக்கு இறைவன் அருள் செய்த முறையும் இதனை நன்கு விளக்குகின்றன. இனி. கடவுள் தனது எசமானன் எனவும் தான் அவரினடிமையெனவும் கொண்டு வழிபாடாற்றும் முறையைத் தாசமார்க்கம் என்பர். இந்நெறியிலொழுகியவர் திரு[illegible] தனக்கு வேண்டிய பொன்னோ, பணியோ, உண்டியோ, மனைவியோ எல்லாம் இறைவனிடம் கேட்டுப் பெற்றும், பெருந்தவழி அவரை வைதும் தன்குறியினின்று பிறழாது வாழ்ந்தவர் சுந்தரமூர்த்திசுவாமிகள். இந்நெறியைச் சகமார்க்கம் என்பர். ஐம்புலனாகிய வேடரிடைச் சிக்கி வளர்ந்து அவர் தீநெறியே உண்மை நெறியென மயங்கித் தான் கடவுளின் பிள்ளையென்பதை மறந்து ஒழுகிவந்த ஒருவன், பரிவு கூடிய தந்தையாகிய கடவுள் தன்னைப்போலமானுட வடிவின் வந்து மயக்கத்தையகற்றி, முன்னையறிவைக் காட்டியபொழுது, மெய்யுணர்ந்து, தன்னைச் சீடனாகவும் தனக்கருளிய இறைவனைக் குருவாகவும் கொண்டொழுகும் மார்க்கத்தைச் சன் மார்க்கம் என்பர். இந்த நெறியிற்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திரு . . . . .

. . . ழுக நக்கணர்வாலவா ஆனினம்
. . . புலவேச்சனுமோங்கு
. . தீயதெல்லாம் அரனுமமே
. . வையகமுந் துயர்தீர்கவே

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

. . ழ். மன்மத ஹு ஆவணி மீ ௧௭ உ வெள்ளிக்கிழமை

## மர்மத்தின் மேல் மர்மம்...........!

உயர்தரக் கல்வியில் அரசவரிசை மொழிகள் பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பெற்ற ஆணைக் குழுவினர் இருவேறு கொள்கையினராகப் பிரிந்துவிட்டார்கள் என்றும் ஒருசாரார் ஒரு மொழியை மீய நிலைநாட்ட உறுதி செய்துவிட்டார்கள என்றும் மற்றையோர் அவ்வழிக்கு எவ்வகையிலும் உடம்பாடுடையரல்லரென்றும் பல திங்களாகச் செய்திகள அறிவித்தவண்ணமா யிருந்தன. ஒருமொழிக் கட்சியினரின் எண்ணம் திட்டவட்டமாய் வெளிவந்துவிட்டது. ஏனைய ஆணைக் குழுவினரும் தங்கள் எண்ணத்தைக் கள்ளங் கபடமின்றிப் பலரறியச் செய்துவிட்டனர். இவ்விரு பகுதியினரும் உண்மையிலே சிங்களம் தமிழ் எனும் இருமொழிகளும் இலங்கையிலே எக்காலத்திலாவது அரசவரிசை பெறுதிருக்கவே யோசனை கூறியிருக்கின்றார்கள் என்பது இப்பொழுது வெள்ளிடைமலைபோலத் தோற்றிவிட்டது. மொழிகள்பற்றி இந்நாட்டிலே ஒரு பெரும் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கு ஆணைக்குழுத் தலைவரும் அவரது அடியார்களும் இறுமாப்புக் கொண்டிருக்கும வேளையில் ஏனைய குழுவினர் ஆங்கிலமே என்ஞான்றும் அரசமொழியாய் நின்று நிலவுவதற்கான வழிவகைகளைக் காட்டியிருக்கின்றார்கள்.

இவ்வளவிலே அரசாங்கத்தார் இந்த விசாரணைக் குழுவினா வேலைத் திறனைநனகு கணித்திருத்தல் வேண்டும். ஆணையிடப்பெற்ற அதிகாரத்தைமீறித் தங்களுக் கப்பாற்பட்டவரை ஆராய்வதிற் காலத்தை அவமே கழித்துவிட்ட குழுவினர்களை அடுத்த நாழிகைப் பொழுதிலேயே அமைச்சரவை 'உங்கள் உதவி வேண்டியதில்லை' என்று விடைகொடுத்தனுப்பியிருத்தல வேண்டும். அன்றியும் முதலமைச்சர் மூச்சுவிடாமற சொல்லி வந்த வாக்குறுதியும் வேறு அமைச்சர்கள விடுத்த விளக்கவுரைகளும் மக்கள் மனத்திலே நல்லெண்ணத்தை உண்டாக்குவதற்குரியவையானால் இதுவரையில் இந்தக் குழுவினர் தங்களுக்கு இடப்பெற்ற ஆணையை இழந்தவர்களாய்ப் பொதுசனத்தின் விருப்பத்திற்கு மாறாக மதி கூறப் புகுந்தவர்கள் என்ற வசை பெற்றவர்களாய்க் கண்டனஞ் செய்யப் பெற்றுத் தண்டிக்கப்பட் டிருப்பார்களல்லவா? அமைச்சவை ஏன் அமைதியா யிருக்கின்றது. தனது ஆணைக்கும் அதிகாரத்துக்கும் மீறி நடக்கும் விசாரணைக் குழு தொடர்ந்து வேலைசெய்தல அரச ஒழுங்குக்கு இழுக்கைத் தருமன்றோ?

—O—

அரசியலலை

# தற்பெருமைபிடித்து வீரங்கூறுதல் தமிழ் மரபா?

## பொதுசனத்தின் தலைவிதி இதுதானு..............?

கற்குடாவில் ஒரு தேர்தற்போர் — கோப்பாயில் ஒரு போட்டிப் போர். இவை நடந்துவிட்டாற் போதும் தமிழகம் உய்ந்துவிடுமாம்!

வவனியாவில் ஒரு வல்லடி வழக்கு. அது முடிந்துவிட்டால் எல்லாம் முடிவாகிவிடுமாம்!

தமிழகமே! உன்பாடு இதுதானு?

ஐ. தே. க. அங்கத்தவர்கள் ஒருபுறம் ஒன்றும் பிழையில்லை எல்லாம் நன்று எங்கள் கட்சி கற்பகதரு காமதேனு எங்கள் எண்ணம் எது கைகூடாது போவது என்று வெற்றியிலும் சுண்ணாம்பிலும் சத்தியஞ் செய்கிறார்கள். திரு. நல்லையாவும், திரு. சிற்றம்பலமும் பேசிப் பேசிக் களைப்பெய்தவில்லை. இப்பொழுது வீரச்சபதம் கூறுவதிலேயே காலத்தைக் கழிக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியும் தமிழ்மாநாட்டாரும் ஒன்று சேருவதுபற்றி எண்ணிய அளவிலேயே நிற்கின்றார்கள்.

இடதுசாரிகளுக்கிடையில் மொழிபற்றிப் பெரிய பிளவுண்டாகும் போலத் தோற்றுகின்றது.

இக்கவிதமான தொந்தரவுகளுக்கெல்லாம் வழி ஒன்றுண்டு. வவனியாவிலே திரு. சுந்தரலிங்கத்தைத் திரு. குமாரசுவாமி அல்லது திரு. நல்லையா போட்டியிட்டுக் காற்று எப் பக்கம் வீசுவது என்று அறிந்துகொள்ளலாம். மொட்டை ; ட்ட வேண்டாம். வீசையை அகற்ற வேண்டாம், வெற்றி தோல்வியைப் பார்க்க வேண்டாம் மக்கள் மன எண்ணத்தை மாத்திரம் பார்க்கலாமே.

அந்த இடைத் தேர்தலின் பின் அந்த முடிவு போதாதென்றால் அடுத்த படியாக ஒருதொகுதியிலே இப்படியான போட்டியை நடத்தி இலங்கை மக்கள் இதுதான் உண்மை இது பொய் என்று அறிந்து கொள்ளுவதற்குத் தலைவர்கள் உதவி செய்தல் கூடாதா?

மாநகர சங்கத்தில் உடை மரபு

கொழும்புமாநகர சங்க அங்கத்தவர்கள் ஒரு திட்டப்படி உடை அணிவது தான் மரபு. பல்வேறுவிதமாக அரைகால் முக்கால் ஆடை தரிப்பது ஆகாது என்று அச்சங்கத்தார் ஆலோசிக்கின்றார்களாம். உடை நடை பாவனை நகர பிதாக்களுக்கு மட்டுமன்று வேறெந்தச் சங்கத்தாருக்கும் வேண்டுவனவே.

புறத்தோற்றத்திலும் அகத்தோற்றமே உண்மையில் உகந்ததாயிருக்க வேண்டுமென்பது உண்மையே. ஆனல் நகரபிதாக்கள் பிதாக்கள் போன்று தோற்றுவதற்கு அவ்வித மரபு உடை வேண்டுந் தானே. பிதாக்கள் பிள்ளைகள் போல விளையாட்டு உடை களியாட்ட அணி போடுவது முறையாகாது. நகர பிதாக்கள் தேசப் பற்றில் தேச சேவையில் சமூகத்தொண்டில் இவைகளிலே பிதா உள்ளம் படைத்த பெரியவர்ளாயிருப்பது போலவே பிதா உடை அணிவதும் வேண்டற்பாலது.

## காரைநகரில் சைவப்பிரசங்கம்

———

காரைநகர் கருக்காலி ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் ஆடி மாதம கார்த்திகைத் திருநாளாகிய (11.8.55) வியாழக்கிழமை இரவு சைவப்பிரசாரகர் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் அவர்கள் சைவ சமய ஒழுக்கம் என்பதைப் பீடிகையாகக் கொண்டு சிறந்த விரிவுரை செய்தனர். பிரசாரகர் அவர்கள் சைவசமயிகள் விதிப்படி தீட்சை பெற்று சமயானுஷ்டானம் செய்து வருதல் வேண்டும் என்றும தினந்தோறும் ஆலயஞ்சென்று வழிபாடு செய்து வருவதுடன் ஆலயத்திற் செய்யவேண்டிய தொண்டுகளைச் செய்துவருதல் வேண்டுமென்றும், பாவச் செயல்களை நீக்கிப் புண்ணியச் செயல்களைச் செய்து வருதல் வேண்டுமென்றும், தமது பிரசங்கத்தில் வற்புறுத்திக் கூறினர்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 4—9—55 —— 10—9—55

மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

வழக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் இது ஒரு நல்ல வாரம். ஒரு மாற்றமும் செய்ய வேண்டாம. தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. வார இறுதியில் நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்தவாரம் புது முயற்சிகள் பெரும் செலவை உண்டாக்கும். கந்தோரில் சில தொந்தரவுகளுக்கும் நண்பருடன் சில பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. பண நிலைமையும் நலமாயிருக்கமாட்டாது.

மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ம், 1ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். கருமங்களை மிக இலகுவாக நீர் ஒழுங்கு பண்ணக் கூடியதாயிருக்கும. சமூக முயற்சிகளில் கித்தியும புகழும் நிச்சயம். சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர்.

கடகராசி புனர்பூசம 4ம்பாதம பூசம் ஆயிலியம்,

இந்தவாரம் செலவதிகரிக்கும். புதுப் பொறுப்புக்களையும் ஏற்பீர். நண்பருடனும் இனத்தவர்களுடனும் சண்டைகளுக்கிடமுண்டு. வார இறுதியில் . . . . . முண்டு.

சிங்கராசி மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

இந்தவாரம் உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. தேகசுகம் பாதிக்கப்படக்கூடும் ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம. முதல் இரு நாட்களும் எல்லாவற்றிலும் பழுதானவை

கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.

முதல் இரு நாட்களும் நல்லாயிருக்கும். செவ்வாயும புதனும் கவனமாய்க் கழிக்க வேண்டும வியாபார முயற்சிகளுக்கு வார மிகுதி நல்லாயிருக்கும். ஆனல் மனச்சமாதான மிருக்கமாட்டாது.

துலாம் சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

உத்தியோக கருமங்களுக்கு வாரமுற்பகுதி நல்லாயிருக்கும். வியாழனும் வெள்ளியும் உபமை அதிகம் வருத்தும். வார இறுதி சிறு நல்ல புதினங்களைத் தரும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்தவாரம் வேலைகூடினதாயிருக்கும். ஆனல் நீர் மிகுந்த நன்மைகளைப் பெறுவதும் நிச்சயம். ஒரு அளவுக்கு அன்னியராயிருப்போர் நண்டரிலும் பார்க்க உதவியாயிருப்பர். கடைசி இரு நாட்களும் சில இடைஞ்சல்களை உண்டாக்கும். ஆனல நீர் அவைகளை வெல்லுவீர்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்

குடும்பச்சூழலில் நிலைமைகள் விரைந்து திருந்துகின்றன. உம்முடைய எதிர்ப்புக்களிற் பலவற்றை நீர் வெல்லக்கூடியதா யிருக்கும். தேகசுகம் நல்லாயிருக்க வேண்டும். ஆனல் செலவதிகரிக்கும்.

மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் நீர் மிக முயன்று வேலை செய்வீர். ஆறுதலிருக்கமாட்டாது, தேகசுகம நல்லாயிராது. கந்தோரிலே சில தொந்தரவுகளுக்குமிடமுண்டு. ஆனல் அவை அபாயமானவையா யிருக்கமாட்டா.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

ஒரு நல்ல வாரம். உம்முடைய உத்தியோக காரியங்கள் தொடர்ந்து நல்லாயிருக்கும். ஆனல் குடும்ப சமாதானம சிறிது மிருக்கமாட்டாது. வாரஇறுதியில இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாய் இருக்கவும்,

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இந்தவாரமும் தொடர்ந்து நல்லதாயிருக்கும். முயற்சிகளிலே காத்திராத சித்தி நிச்சயம். உம்முடைய பகைவர்கள் உமக்கு எதிராய் வேலை செய்வதை நிற்பாட்டிவிடுவார்கள். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்ஷைச் சிறப்பறியும் தீவிர மறுமலர்ச்சி

—————0—0—————

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பர்களின் சூழ்நிலை இப்படி இருக்கிறதே தவிர மற்றைச் சமயத்தவர்களிட இப் பரிதாபமான நிலை இல்லை. பொதுவாகக்கிறிஸ்தவர்களிடத்திலும் இஸ்லாமியர்களிடத்திலும் நல்ல சமய உணர்ச்சியும் சமயக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடப்பதுமுண்டு. கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். சைவர்களுக்குள் தீட்சை பெற்றவர் எத்தனைபேர் என்று பார்த்தால் நூற்றுக்குப் பத்து வீதமுமிராதென்று தான் கூறவேண்டும்; கிறிஸ்தவர்கள் சிலுவை அணிவதற்குக் கூசுவதில்லை. நமது சைவமக்களிடம் பெரும்பாலும் தங்களைப் படித்தவர்களென்று சொல்பவர்களிடம் சைவ அபிமானமும் சைவ அனுட்டானமுமில்லை நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது. எமது நாடு எமதென்பதை உணர்ந்தோம் எமது சமயம் சைவசமயம் ஆகையால் சைவ நூல்களில் கூறப்பட்டிருக்கும் உண்மைகளைக் கடைப்பிடித்தொழுகுவதே சாலச் சிறந்த அணிபாகும்.

தீட்சை பெற்றவருக்கே மனதைக் கட்டுப்படுத்த வாய்ப்புண்டு. கண்ட பொருள்களிலெல்லாம் தாவிச் செல்லும் குரங்கு போன்ற மனதைக் கட்டுப் படுத்தி ஒரு பொருளில் நிலைநிறுத்தி ஆன்ம விடுதலையைப் பெறவே தீட்சை வேண்டும். கடவுள் மந்திர வடிவமாகவே அமைந்திருக்கிறார். பதினாறு இடங்களிலும் அணியப் பெறும் விபூதி அனேக தத்துவங்களைக் குறிக்கின்றது. தீட்சை நடக்கும்போது மந்திரத்தினாலுங் கிரியையினாலுஞ் சிவபெருமானுடைய பேரருள் மாணக்கருக்குக் கிடைக்கும். அந்த அருளோடு கேட்கப்பட்டால் மாத்திரம் மந்திர செபம் பயன் படும். ஆதலால் தீட்சை பெறாமல் செய்யும் மந்திரசெபம் பயன்படாது. மெய்யறிவு, அடக்கம், ஆசாரம், ஒழுக்கம், வழுக்கிலாத் தவம், அன்பு முதலிய நற்குணங்களை யுடைய குரு, ஒருவருக்கு வாய்க்கப்பெறாரல் அதனிலும் பார்க்க இம்மை மறுமைப் பயன் வேறில்லை. குருவைப்போல சீஷன். குரு சற்குருவானால் சீஷனும் நல்ல சீஷனுவான். ஒருவர் செய்த பூர்வ புண்ணிய வசத்தினல் ஒருவருக்கு சற்குரு கிடைக்கும். 'தாரமுங் குருவும் தலையின்விதி'' என்று ஆன்றோர் கூறுவர். தற்காலத்தில் எல்லா இலட்சணங்களும் பொருந்திய ஓர் சற்குரு கிடைக்கா விட்டாலும இருப்பவர்களுக்குள் ஓர் நல்ல குருவைத் தேடி அவரிடம் தீட்சை பெறவேண்டும். குருவில்லாமல் ஆன்ம விடுதலை அடைய முடியாது. குருவில்லா வித்தை கீழுமில்லை; மேலுமில்லை. இம்மை வாழ்விற்கும் மோட்ச வாழ்விற்கும் குருவே வழிகாட்டி. குருவே சிஷ்யனுடைய இருதயத்தில் புகுந்து அவனுடைய வேகத்தைத் தடுத்தாள முடியும். தொழிற் கல்வி, உடற் கல்வி வித்தியாசாலைக் கல்வி ஆகிய எவற்றிற்கும் ஒரு குரு வேண்டும். ஞான சாத்திரங்களைக் கற்பதற்கும் ஒரு குருவேண்டும். ஞானசாரியனை இல்லாமற் கற்கும்போது ஞானநூல்களின் பொருள் மாறுபாடாகத் தோன்றும். அல்லது சிறந்த பொருள் தோன்றாமல் நிற்கும். ''எமக்கெனவனுக்கெனவை தெரியும தமக்கவனை வேண்டத் தவிர்'' என்றும 'ஆசானருளால் அடிசேர்ஞானம் வந்திடும் மற்றொன்றாலும் வாராதாகும்'' என்று வரும் நினைவு ஆன்றோர் வாக்கை நாம்கூரவேண்டும். சைவ அனுட்டானத்திற்கு உயிராயுள்ளது ஐந்தெழுத்தாற் கடவுளை வழிபடுதலே. இதற்குத் துணையாக உடற்சுத்தியும உள்ளச் சுத்தியும வேண்டும். ஆணவம் கன்மம் மாயையாகிய மும்மலங்களின வலிமையை அடக்குவதற்கு விபூதி ஸ்நானம், மந்திரஸ்நானம், கடவுள வழிபாடு முதலியன வேண்டும். இறுதியில் பேரின்ப வாழ்விற்கு ஒருவரை ஆளாக்கும் ஐந்தெழுத்தை நாம் எல்லோரும செபிக்க வேண்டும். தீட்சை பெறாதவர்களுக்கு ஐந்து எழுத்து எவை என்று தெரிந்தபோதிலும் குருமூலமாகவே அவ்வைந்தெழுத்தைப் பெறவேண்டும். குருமூலமாகப் பெற்ற ஐந்தெழுத்தின் உபதேசம் ஒருவன தான் விரும்பிய பயனைக் கொடுக்கும். அனுட்டானம் உடலஉறுதி மனஉறுதி காரியசித்தி முதலியவற்றைக் கொடுக்கும். சைவஒழுக்கம், அனுட்டானம், தீட்சை பெறுதல் முதலியவற்றில் ஒரு புனருத்தாரணம சமுதாயத்தில் எழவேண்டும். விஞ்ஞான விருத்தியின் முதிர்ச்சியினாலும், சக்கை போன்ற ஆடம்பர வாழ்க்கையினாலும் மாந்தர்களின் உள்ளத்தில் சாந்தியில்லை. உண்டு உடுத்து வாழ்வதனால மாத்திரம் நிலையான இன்பம் பெறமுடியாதென்ற ஒரு எண்ணம் மாந்தர்களின உள்ளத்தில் எங்குமிருக்கின்றது. வெறும் ஆடம்பரவாழ்க்கையால் இன்பம்பெற முடியாது. நிலையான, உறுதியான உண்மையான இன்பத்தைப் பெற நாம் எங்கும் நிறைந்து அங்கிங்கெனாதபடி எங்கும் செறிந்து விறகில் தீபோலவும், பாலில் வெண்ணெய் போலவும் மறைந்து தோன்றாத் துணையாயிருக்கும் இறைவனை நாம் நாடவேண்டும் அந்த இறவா இன்பத்தைப் பெறுவதற்கு உறு துணையாயுள்ள ஐந்தெழுத்தைப் பெறுவதற்குத் தீட்சை பெறவேண்டும். ''தீட்சை'' என்னும் விஷயத்தில் மறுமலர்ச்சி உண்டாக வேண்டும். அது அர்த்தமற்ற அநாகரிகமான விஷயமல்லவென்றும் அது உண்மைப்பொருள் நிறைந்த விஷயம் என்றும் நாம உணர வேண்டும். இவ் விஷயத்தில் வீடும் வித்தியாசாலையும் ஒத்து இயங்க வேண்டும். சைவப் பெற்றோர்கள் சைவாபிமானமுள்ளவர்களாய், தாமே சைவ அனுட்டானமுள்ளவர்களாய், தமது குழந்தைகளாகிய செல்வங்களைச் சைவப் பற்றுள்ளவர்களாய், சைவ ஒழுக்கமுள்ளவர்களாய் வாழ வைக்க வேண்டுமென்ற அவாவுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். ''மனமிருந்தால் இடமுண்டு'' என்றமாதிரி இவற்றில் மனவிருப்பமிருந்தால் நேரம்தானாகவே வந்து சேரும். சைவ அனுட்டானத்திற்கு நேரமில்லையென்று கூறுதல் விருப்பமில்லாமையையே காட்டும். வீட்டில் சைவ மணம் கமழ்ந்தால் சைவ வித்தியாசாலைகளிலும் அம் மணம் பரவத்தான் செய்யும். ஆசிரியர்கள் சைவ ஒழுக்கமுள்ளவர்களாய், சைவப் பற்றுள்ள வர்களாய், விபூதி அணிகின்ற நித்திய பழக்கமுள்ளவர்களாய் வாழ்ந்தால் மாணவர்கள் தாமே திருந்துவார்கள். வித்தியாசாலைகளினதும் கல்லூரிகளினதும் முகாமைக்காரரும் தலைமை ஆசிரியர்களும ஏனைய ஆசிரியர்களும குருமார்களும் ஒத்துழைத்து ஒருமுகமாக இத்துறையில் உழைக்க வேண்டும. தீட்சை பெறாத பிள்ளைகளுக்கு தீட்சைபெற வசதி செய்ய வேண்டும். கிராமங்கள்தோறும், நகரங்கள் தோறும் இவ்விஷயத்தில் எழுச்சியுண்டாக வேண்டும். சைவ மக்கள் எல்லோரும் தீட்சைபெற்று ஒழுக்கம், ஆசாரம், முயற்சி, சமய ஞானம் முதலியன உடையவர்களாய் வாழ்ந்தால் நாடு பல வழிகளிலும் செழித்தோங்கும்.

# இருமொழிகள்பற்றி பொதுவுடைமையினர் இயக்கம்

இலங்கைப் பொதுவுடைமைக்கட்சியின் யாழ்ப்பாணப் பிரதேசக் குழுவினர் தீர்மானப்படி தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கி, அவ்விரு மொழிகளையும் அரசகரும மொழிகளாக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தும் நோக்கமாக ஓர் இயக்கத்தை இக் கட்சி ஆரம்பித்திருக்கிறது. இவ்வியக்கத்தின அடிப்படையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின பல பகுதிகளில் கட்சி கூட்டங்கள் நடத்தி வருவதுடன் இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்குவதற்கு நாட்டின் அரசியற் சட்டத்தில் உடனடியாகத் திருத்தஞ்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும கோரிக்கையை தபாலமூலம் பிரதமருக்கு மக்கள் அனுப்பி வைக்கும் இயக்கத்தையும் நடத்தி வருகின்றது. தமிழ், சிங்களம், ஆகிய இருமொழிகளும் சம அந்தஸ்துடன் அரசகரும மொழிகளாக்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு, ஓர் ஐக்கிய இயக்கத்தை உருவாக்கும்நோக்கமாகக் கட்சி கூட்டவிருக்கும் மகாநாட்டிற்கு மற்றைய அரசியற் கட்சிகளையும் அழைத்திருக்கின்றது என்று கட்சிச் செயலாளர் அறிவிக்கின்றார்.

# அணிந்துரை அரங்கம்

இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்

ஆசிரியர்: மதுரை திருவருள் தவநெறி மன்றம நிரந்தரத் தலைவரும் மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் இளவரசும ஆகிய திருப்பெருந்திரு திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமி அவர்கள்.

மதுரை திருவருள் தவநெறி மன்றத்தாரால அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

விலை பிரதி ரூபா 1-50

பெறுமிடம்: (1) சுந்தரம்ஸ் லிமிடெட் கொழும்பு.

(2) சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், சிந்தப்பிட்டி, கொழும்பு.

''மரணத்தின்பின் மனிதர் நிலை என்ன என்பதை விளக்க இது முன்வந்துளளது. மனிதர் நிலையை விளக்கும் பொழுது மறைய உயிர்களின் நிலையும் ஒருவாறு விளக்கப் பெறுகின்றது.

இவ்வுலக வாழ்வுபோன்றதாய் யாதனசரீரம் எனப்படும் சூக்கும உடலுடன் வாழும் மற்றோர் உலக வாழ்வு இருக்கின்றதென்பது சங்க இலக்கியங்கள் சைவசமய இலக்கியங்கள் ஆதியவற்றோடு கிறிஸ்துவ இஸ்லாமிய சமயநூல்களிலிருந்து பல எடுத்துக்காட்டுகள் தரப்பெற்று இதில விளக்கப்பெறுகிறது. இறந்தோருடன் பேசுதல பற்றியும் அதனுல் வரும் நன்மைபற்றியும் இது கூறுகின்றது. பரவாழ்வுபற்றிச் சிந்தியாதோரைச் சிந்திக்கச் செய்யும் தன்மையது. ''எப்பொருள் எத்தன்மைத்தாயினும அப்பொருள மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்றபடி எச்சமயத்தவராலும் இது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

## சதானந்தன்

இது அளவெட்டி சதானந்த வித்தியாசாலையின் வெள்விழா மலராய் வெளிவந்துள்ளது. பேரிடையூறுகள் மலிந்த காலத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே ஆரம்பிக்கப்பெற்ற இவ்வித்தியாசாலை அவ்விடையூறுகள் எல்லாவற்றையும் இறைவன் திருவருளால் வென்று பூர்வபக்கச்சந்திரன்போல வளர்ந்து, இன்று அதி உன்னத நிலையை எய்தியிருக்கின்றது. இவ்வித்தியாசாலையைப்பற்றிய குறிப்புக்களும இதுபற்றிய அறிஞர்கள் தந்திருக்கின்ற புகழுரைகளும் இவ்வுண்மையை இனிது விளக்குகின்றன.

இத்தகைய சிறப்பைப் பெறுதற்கு முகாமைக்காரர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், அன்பர்கள் ஆகிய யாவரும ஒத்துழைத்தமையே காரணமாயிருந்திருக்கின்றது முன்னேற்றத்துக்கு முயலும் பாடசாலைகளெல்லாவற்றுக்கும் இஃது ஓர் முன்மாதிரியாய் விளங்குகின்றது.

இறைவன் திருவருளால் இந்நிலைமை நிலைத்து இனிது வளர்வதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிதழ்த் தொடர்ச்சி

## மகா கவி காளிதாசரின்

# குமார சம்பவம்

தமிழாக்கம்

பரமேஸ்வரக் கழகம் — ச. இராமச்சந்திரன்

இமயப் பைஞ்சுனை வக்தெழிற் முமரை
இரு கரத்தும் எழுவர் இருடிகள்
அமையக் கொய்ய அதன்கீழ் அருக்கனும்
அளர்த்து மீதிதன் அங்கதிர் மேலுய்த்தே. (16)

இலகு வெள்ளிக் கிசைந்த பொருளெலாம்
ஈத லாலயன் இம்மலைக் கம்மகம்
நிலவு பாகமும நீணிலம் தாங்கலால்
கேர ஈந்தனன் நீடும் அரசையுர். (17)

வேறு

இன்னபே ரிமய மன்னன் இலங்குமா மேரு தோழன்
மன்னிய பேலோர் தங்கள் வழியினில வந்த மாது
பன்னிய சான்றோர் தாமும் பணியுகற் கற்பின் மேனை
என்னுகற் பெயரினளை எழிலுறு மணத்திற் கொண்டான். (18)

தன்னிகர் தையலாளும் தனிமலை அரையன் தானும்
இன்னசீர் மணத்தா னெய்துமம இன்பவா ரியினின் மூழ்கி
மன்னினர் வைகு மெல்லை மலர்ந்தொழு கழகி னின்பத்
தன்னதோர் பலனைக் கொள்ள ஆயிழை வயிறு வாய்த்தாள். (19)

வந்துதித் திட்டான் பூவின் மைநாகன் மாண்பின் மிக்கான்
இந்திரன் குலிசத்தாலும இடருறு வற்றம சான்றோன்
நந்துசீர் நாகர் தங்கள் நங்கையர் நயத்தற் கேற்றோன
சந்ததம் உறவு பூண்டான் சமுத்திர ராசனோடே. (20)

(தொடரும்.)

# அகில இலங்கை
# சுவபாஷா இயக்கம்

## கல்வி அறிக்கைக்கு கண்டனம்

இலங்கையில் தமிழர்சிங்களவர் ஆகிய இரு பெரும் சமூகத்தினர் பனெடுங் காலமாக வாழ்ந்து வருகின்றனர். அரசியலில் கூடிய பொறுப்புடன் ஒத்துழைத்தும் வந்திருக்கின்றனர். ஆனல் சமீபத்தில் உயர்தரக கல்வி ஆராய்ச்சிச் சபையின் அறிக்கையின்படி ஒருமொழியே போதனமொழியாக இருக்க வேண்டும் என்ற அறிக்கையினுல நாட்டில் குழப்பநிலை உண்டாகியிருக்கின்றது. அவர்களின் அறிக்கை சிறுபான்மை மககளாகிய தமிழரை நசுக்கும் ஒரு சதித் திட்டமாகும. ஒரு சமூகத்தவரின் உரிமை மொழியிலேயே தங்கியிருக்கிறது. மொழிக்கு ஆபத்து வருமாயின் எந்த ஒரு சமூகததவனும் விட்டுக்கொடுகக மாட்டான் என்பதனை அரசியல வல்லுநர் அறிவர் என்று யாழ்ப்பாணம வண் - நாவலர் பாடசாலை மணடபத்தில் நடைபெற்ற அகில இலங்கை சுவபாஷா இயக்கக் கூட்டத்தில் தலைவர் கூறினர்.

ஆசிரியர் சி. சிவரத்தினம அவர்கள் பேசும்போது இன்றைய அரசியலார் சுயமொழிகளுக்கு மதிப்புக் கொடுககிறோம என்று வெறும் வாய்ப்பேச்சளவிற்கூறி மக்களை ஏமாற்ற இனிமேல் முடியாது. அவ்வாறான கிளர்ச்சி நாட்டில் எழுந்து திரண்டு வருகின்றது என்று கூறியதோடு வருகின்ற பொதுத் தேர்தலில சுயமொழிப் பிரியர்களையே தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமெனறுங் கூறி சுயமொழி இயககத்தாருடன மக்களை ஒததுழைககுமாறு கேட்டுக கொண்டார்.

பின்வரும்பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

சமீபத்தில் உயர்தரக் கலவி ஆராய்ச்சிச் சபை (கமிஷன்) ஒரு மொழியே போதனு மொழியாக இருக்க வேண்டுமென்ற அறிக்கையை இவ்வியககம பகிஷ்கரிககின்றது. இது ஏறறுக்கொளளப் பட்டால் சிறுபான்மை மககளாகிய தமிழர்களை நசுக்குவதாயிருக்கும்.

திருவாளர்கள் க. தம்பிராசா, க. சத்தியானநதசிவம், வ. கந்தசாமி ஆகியோரும் பேசினர்.

**உண்மை பேசி உயர்வு அடைக**

சிறுகதை

# எழுத்தறிவித்தவன் - - இறைவனாகும்

## குருபத்தியுடையோர்க்குக் குறைவொன்றுமில்லை

(முற்றொடர்—3)

மேலும் இக்கம்மலை உதங்கன் பெற்றுக்கொண்டதைவிட அந்த அரசனின் மனைவியின் கற்புக்கு மகிழ்ந்து அரசனிடத்து வந்து கம்மலைப் பெற்றுககொண்டேன் விடைதர வேண்டும் அரகனேயென, அரசன் இந்த உதங்கனை நோக்கி ஓ மகானுபாவா! இன்றையதினம் என் மனையிற் புசித்துப் பின்பு உமதிடத்திற்குச் செல்லுமென்று அன்புடனே கேட்டுக் கொள்ள உதங்கன் இசைந்துகொண்டு அவ்வரசனேடு அந்தப்புரத்திற்குச் சென்று அவ்வரசனுந் தானும் உண்கிறபொழுது அந்தச் சாதத்தில் ஓர் மயிரிருக்கக் கண்டு, அவ்வுதங்கனுக்குக் கோபம் பிறந்து அரசனை நோக்கி "கலத்திற் சோற்றையிட்டுக் கழுத்தை அறுத்ததுபோல' அசுசியாயிருககிற அன்னத்தை எமக்குத் தந்து என்னைப் பசியாயிருககும்படி செய்தனையே! இக் குற்றததினுல் உனது கண்ணெளி இழந்துபோகக் கடவதென்று சாபமிட அரசன் ஐயா! இக் குற்றம என்னுலே நேரிட்டதல்ல. அப்படியிருந்தும் அக் குற்றத்தை என்னுடையதாகப் பாவித்தாலும், குற்றததுக்குத் தகுந்த சாபமிடாமல் விபரீதசாபமிடலாமா! யோசிக்காமல் சினங்கொண்டு எனக்குச் சாபமிட்டதினுல் நீர் கலியாணமின்றித் தேசசஞ்சாரியாக இருக்கக்கடவதென்று அந்த உதஙகனுக்கு அரசன் மறுசாபமிட அதனுல கோபம் தணிந்த உதஙகன அரசனை நோக்கி, எனக்குக் கொடுத்த சாபம் என்னை அடையாதிருக்கக கிருபை செய்ய வேண்டுமென்றுவேண்டிக்கொளள அரசன் நகைத்து, ஐயனே! உலகத்திலுள்ள அரசர்கள் இட்டசாபத்திற்கு மறு சாபம கொடுப்பதை எஙகேயாகிலும கேட்டதுண்டா? இல்லையே ஆதலால் நானிட்ட சாபததிற்கு மறுசாபமில்லை

தேவரீர் எல்லா நூல்களையுங் கற்றுணர்ந்து சித்த சாந்தமடைந்த பரமாத்மாவாகையால் எளியேன் மீது கிருபைகூர்ந்து நீர் இட்ட சாபத்தை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள உதஙகன் மகிழ்ந்து தான் அவ்வரசனுக்கு [illegible] ண்டு அந்தக் கம்மலைக் கைசோரவிடாமல் மிகுந்த உற்சாகத்துடன் தனது குருவாகிய பயிபில முனிவர் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றான்.

உதங்கனுக்குக் கொடுத்த உணவில் ஓர் மயிருக்கக் கண்டபடியால் அரசன் செய்த உதவியையும் மறந்து அரசனுக்குக் கண்கெட வேண்டுமெனச் சாபமிட்டான. இக்காலத்தில் எமக்கு எவ்வளவோ உதவி செய்தவர்களுக்கு நாங்கள் கெடுதல்களைச் செய்கின்றோம். அப்படிக் கெடுதி செய்தால் நாமே தண்டனைக்குள்ளாவோம். செய்நன்றி மறந்து அற்பகாரணத்துக்காகக கண்களை இழக்க வேண்டுமெனச் சாபமிட்டால் நாங்கள் தினமும் செய் நன்றி மறந்து செய்கின்ற அல்லது நினைக்கின்ற செயலகளுக்கு எவவளவு தண்டனை கொடுக்கவேண்டுமென்பதை யோசனை செய்து பாருங்கள். செய்நன்றி மறந்த உதங்கன் தன் சாபத்தை நீக்கிவிட்டான். அரசனிட்ட சாபத்தை நீக்கமுடியாது. அக்காலததில அரசர்சரி ஏனையோர் சரி யாவரும் சாபம் இட்டால் அதனபடி நடக்கும். ஏனெனில் அக்காலத்தில் உள்ளோர் யாவரும தீய கருமங்கள் ஒன்றும செய்ய மாட்டார்கள். தான தருமங்கள் செய்பவர்களாயும் சதா கடவுள் பக்தியையுமுடையவர்களாயுமிருந்தார்கள்; ஆகையால தான் அவர்கள் சாபமிட்டால் அது நிச்சயமாகவே நடக்கும். உங்கள் சாபமும் பலிக்கவேண்டுமாகில நீங்களும் சதா கடவுள் பக்தியாயும் நற்கருமங்களையே செய்பவர்களாயும் தீய எண்ணங்களைச் சிந்திக்காமலும், செய்யாமலும் தானதருமங்களைச் செய்பவர்களாயும் இருத்தல் வேண்டும். அவ்வண்ணமிருந்து பாருங்கள் நீங்கள நினைத்த காரியம் யாவும் நிறைவேறும்.

செய்நன்றி மறந்த உதங்கன் தனக்கு அரசனுல் இடப்பட்ட சாபத்தையும் ஏற்றுக்கொண்டு அந்தக கம்மலைத் தன குருவின் பததினிககுக் கொண்டு வரும்பொழுது சூரியன் அஸ்தமித்தான்.

அதுகண்டு சந்தியானுஷ்டானஞ்செய்ய இந்த உதஙகன் ஓர் குளக்கரையில் வந்து அந்த ஆபரணத்தைப் பூமியில வைத்து விட்டுச் சந்தியானுஸ்டானஞ் செய்துகொண்டிருககையில், துஷ்டனுகிய தக்ஷகன் ஒரு பிராமணனுய் வேடந்தரித்து வந்து அந்த ஆபரணத்தை எடுத்துக் கொண்டு போக, அதனைக் கண்ட உதங்கன் அத்தக்ஷகனை விடாமற் பின்பற்றி அதிவேகமாய்ச் செல்லுகையில் அத்தக்ஷகன் தனது உலகத்திற்குச் சென்றான்.

இந்த உதங்கனும் அந்த நாகலோகத்திற்குச் சென்றான். இதனை உணர்ந்து தக்ஷகன் நாகலோகத்திலிருக்கிறவர்களில் ஒருவராகிலும் இம்முனிவன் கண்ணுக்குத் தோன்ருமலிருக்க மாயஞ் செய்து மறைய இம்முனிவன் மிகுந்த துன்பத்தை யடைந்து, கடுமையான கோபத்தைக் கொண்டிருப்பதைவிட அதிக மகிழ்ச்சியில் மறதியைக் கொண்டிருக்கிறது மிகவும்கெடுதியென்று நூல்களால் அறிந்திருக்கிறதுமன்றி, இந்த நகையைக் கொடுத்த அந்த அம்மனும் நமக்கு ஞாபகப்படுத்தியும் "விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுந்தவர் போல" ஆனேமே யென்று பலவாறே தன்னைத் தானே நிந்தித்துக் கொண்டு அந்த நாகலோகத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறுன்.

சிலர் அக்காலத்திலுள்ள புராண சரித்திரங்களை வெறும் கட்டுக்கதையென்றும் அவற்றைப் படிப்பதில் பிரயோசனமில்லை என்றும் இக்காலத்தில் சொல்லுவதை நீங்கள் கேள்விப்பட் டிருப்பீர்கள். இக்காலத்திலுள்ள எங்களின அறியாமையே அதற்குக் காரணம்.

தற்காலத்திலுள்ள விஞ்ஞான ஆராய்ச்சியாளர் எவ்வளவோ ஆச்சரியமான செய்கைகளைச் செய்கிறார்களென்பதை நீங்கள் தினமும் பத்திரிகைகள் மூலம் வாசித்து அறிந்திருப்பீர்கள்.

ஆனல் எங்கள் நூல்களாகிய இராமாயணம் கந்தபுராணம் மகாபாரதம் இன்னும் அநேக நூல்களிலும் உள்ள சம்பவங்களை அறிந்திருக்கும் பெரியோர்களுக்கு இந்த விஞ்ஞான ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்கள் யாவும் புதிதாகத்தோன்ற மாட்டா. எங்கள் அறியாமையால் நாங்கள் எங்கள் இதிகாசங்கள் புராணங்கள் யாவும் முழுப் புழுகு மூட்டையென எண்ணி விட்டது எவ்வளவு தவறென்பதை யோசித்து இனியாகுதல் அவற்றிற் கூறியவண்ணம் பின்பற்றுவோமாக.

(தொடரும்)

### அரிசி பற்றி எச்சரிக்கை

மக்களுக்கு உதவாத அழுக்கான அரிசி மிருக உணவுக்கென அரசாங்கம் விற்கின்றது. அதை வாங்குவோர் மக்களுக்கே விற்றுவிடுவார்களோ என்று சிலர் அஞ்சுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரத் திருப்பணி அறிக்கை

1-ம் பக்கத்தொடர்ச்சி.

சேகரம் அவர்களுடைய உரிமைக்காரர்களுடன் எமது சபைத்தலைவர் செனற்றர் கௌரவ சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஆக இவ்வாறு ஆலய கட்டிட கைங்கரியங்களைப் பொறுப்பேற்றிருக்கின்றனர். இதேவாறு மற்றும் பரிவார கோயில்களைப் பொறுப்பேற்றுக் கட்டியுதவக்கூடிய தகுந்த சிவபக்தர்களை ஒழுங்கு செய்யும் விஷயத்தில் நிர்வாக சபையினர் முயற்சியெடுத்திருக்கின்றனர்.

இந்தச்சந்தர்ப்பத்தில் எமது சைவசமய அன்பர்களுக்கு ஓர் முக்கிய விஷயத்தை ஞாபகமூட்ட விரும்புகின்றோம். சிவாலயங்களில் நித்திய நைவேத்தியங்கள் கிரமமாக நடைபெறும் பொருட்டும அவற்றின் பரிபாலனத்தமும் நிலங்கள் நிதிகள், சொத்துக்கள் முதலியவற்றைக் கோவில்களுக்கு தர்மசாஸனம் செய்வது சைவமக்களாகிய எமது பண்டைநாள் மரபு. இம்மரபுகிணைய, எம் அரும் பெருந் திருப்பொக்கிஷமாகிய திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிக்கும அதன பரிபாலனத்துக்கும் அதன நித்திய நைவேத்தியங்களுக்கும் சைவ மக்கள் தத்தமக்கியன்றவாறு பொருளுதவி புரிந்துதவுமாறு வேண்டுகின்றோம்.

பொருளுதவி என்று சொன்னல், பணம் மாத்திரம் தரவேண்டுமென்ற பொருளல்ல. செல்வமுள்ளவர்கள் பணத்தை அளித்துதவலாம. மரம் கல்போன்ற கட்டுமானப் பொருள்கள் உள்ளவர்கள் அவற்றை அளிக்கலாம். இதைப்போல், என்னவிதப் பொருளாயிருப்பினும் அதை அளித்துதவுங்கள் என்று வேண்டுகின்றோம்.

காணி நிலம் படைத்தோர் எமது ஆலயத்துக்கெனத் தமாலியன்ற நிலபுலன்களைத் தர்மசாஸனம் செய்து கேதீஸ்வரநாதனின் திருநோக்கைப் பெற்றுய்வார்களாக. தமிழ்ச் சைவ மரபினர்களாகிய நாம இறைவன் பணியில் தயங்கா மாண்பினர் என்னும் உண்மைக்கியைய நாம கொடுக்க வேண்டும். இவ்வுண்மையை நிலைநாட்டும் பான்மையாக, முன்னுள் மன்னர் டிஸ்திரிக் கோட்டில் சக்கிடுத்தாராய்க் கடமையாற்றி இளைப்பாறிய முதலியார் திருவாளர் சி. எம், முத்துக்குமாரு அவர்களின் தாம கைங்கரியங்கள் விளங்குகின்றன. மன்னரில் பிள்ளையார் கோயிலைக கட்டுவித்த இச் சைவப் பெருந்தகையார் எமது திருக்கேதீஸ்வர ஆலயச் சபைக்கும 12 ஏக்கர் நிலம் தானஞ் செய்துள்ளார். இன்னாரது சிவதொண்டு பெரிதும் வியக்கற்பாலது.

### திருக்கேதீஸ்வர சைவப் பாடசாலை

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பராபரிப்பில நடந்துவரும் இப்பாடசாலைத தலைமை ஆசிரியர் நிரு. வி. இராமுப்பிள்ளை அவர்களின் நிர்வாகத்தில் மிகத் திருப்திகரமாக நடந்து வருகிறது. பிள்ளைகள் சைவசமய பாடங்களிலும் தேவார திருவாசகங்களிலும் திறமையாகப் பயிற்சிபெற்று வருகின்றார்கள். பாடசாலையின வருடாந்த விழா சிவராத்திரி தினத்தையடுத்து எமது தலைவர் கனம் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவின் போது குழந்தைகளுக்கு அளித்த பரிசுகள் வழக்கப்படி இச்சபையின் செலவில் வழங்கப்பட்டன. இப்பாடசாலை மேலும் வளர்ச்சிபெற்று பல்லாண்டு துலங்கக் கேதீஸ்வரநாதன் கிருபை பாலிப்பாராக.

### குழாய்த்தண்ணீர் வசதி

இச் சபையின கோரிக்கைக்கு இணங்கி நமது அரசாங்கம் திருக்கேதீஸ்வரத்தில் குழாய்மூலம் சுத்தமான தண்ணீர் விநியோகம் செய்யும் வசதிகளை ஏற்படுத்தித் தந்துதவியது. இவ் விஷயத்தில் பெரிதும் நல்லெண்ணம் வைதது அனுதாபம் காட்டி உதவி புரிகத நமது பிரதமர் மகா கனம் சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களும், ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம். C. W. W. கன்னங்கரா அவர்களுக்கும் இச்சபையின் விசேஷ நன்றி உரித்தாகுக. மேலும இவ்விஷயத்தில் உதவிகள் அளித்த பெரியார்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக. இப்பெரும் வசதியினுல் கிடைதத நன்மைகளை நேரிலேயே அனுபவித்த அடியார்கள் தமது மகிழ்ச்சியையும திருப்தியையும தெரிவிதது எம்மை ஊக்கப்படுத்தினர்கள்.

### திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் திரு மடம்

இம் மடம் ஸ்தலத்தைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு மடத்திலேதங்கின்று திரும்பும் வசதிகளை அளித்து வழக்கம்போல சேவை புரிந்து வருகின்றது. இது பிரம்மஸ்ரீ S. சுப்பிரமணியப்பட்டர் அவர்கள் பராபரிப்பில் இருந்து வருகின்றது, இச்சபையினுல அமர்த்தப்பட்ட ஸ்ரீபட்டர் அவர்கள் மடத்தை மேற்பார்வையிட்டுப் பராபரித்துக் கொண்டு மடத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாருக்கும பூஜைகளசெய்து வருகின்றார். மடத்தில் தங்கும் யாத்திரீகர்களுக்குத தங்கும வசதிகள் மாத்திரமேயன்றி ஆகார வசதிகளும் வழங்கப் படுகின்றன என்பது குறிப்பிடததக்கது.

இஷ் மடமேயன்றி, திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்தில நகரத்தாரால் நடத்தப்பட்டு வரும் மடம் ஒன்று, ஆறுமுகநாவலர் மடம் ஒன்றும யாத்திரீகர்களுக்கு அரும்பெ சேவைகள் புரிந்து வருகின்றன. இவ்விரு மடங்களையும் புதிதாய்க் கட்ட உத்தேசித்துள்ளார்கள் என அறிகின்றோம். அவர்கள் நோக்கம் இனிது கைகூட வேண்டுமென எமது ஆசியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

# அகமார்க்கமும் அதன் பயனும்

1-ம் பக்கத்தொடர்ச்சி

றலை நின்றவர் மாணிக்கவாசகசுவாமிகள். இந்த நான்கு மார்க்கங்களையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பர். இவற்றில் எந்தநெறியில் நின்று ஒருவர் வணங்கினுலும் அவர் வேண்டிப் பெற விழைவது இறைவன் திருவடிகளையேயாம் என்று ஒருவன் கடவுள் திருவடிகளுக் கன்பனுகி மனம் வாக்குக் காயங்களினுல் அவ்விறைவன் பணியாற்றி நான் எனது என்ற அகங்கார மமகாரங்களை யொழித்து தனதுடல் பொருள் ஆவி மூன்றையும் சரணுக்குகின்றுனே அன்றே

இச் சபைக்கு பதினுயிரம் அங்கத்தவர்களைச் சேர்க்க வேண்டுமென்பது சபையினரின் அவா. அது சம்பந்தமான முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. மேலும் அம் முயற்சி முன்னேற்றமடைய எல்லோரும் ஒத்துழைத்து ஒவ்வொருவரும் சபையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து உதவிபுரியும்வண்ணம் தாழ்மையாகக் கோருகின்றோம். அங்கத்தவர்களாய் இருப்பவர்களும் தத்தம் வருட சந்தாவைத் தொடர்ந்து அனுப்பி உதவிபுரியும்படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

உலக சரித்திரத்தின் தொன்மையில் மறைந்து கிடக்கும சரித்திரப் பெருமை வாய்ந்த எமது புண்ணிய திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்திலே எழுந்தருளியிருக்கும் கேதீஸ்வரநாதனது திருக்கோவிலைப் புனருத்தாரணம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கும் இச்சபையானது ஓர் மகத்தான திருப்பணியைச்சிரமேற் கொண்டுள்ளது. இத திருப்பணியினுல் இறைவனுக்குக் கோவில் கட்டி எழுப்புகிறோம் என்பது மாத்திரம பொருளல்ல. சைவசமய வளர்ச்சிக்கும், இத்தமத கலாச்சாம முன்னேற்றத்துக்கும் இது ஏதுவாய் இருக்கின்றது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம். சைவசமய கோட்பாடுகளையும் கலாச்சாரங்களையும் கடைப்பிடித்து, சிவாகமங்களும், திருமுறைகளும் காட்டும் வழியை வாழ்க்கையிலே அனுசரித்து இறைவன் திருவடியை நாடி ஈடேற்றமடைய இதுவுமோர் சிறந்த மார்க்கம என்பதை அன்பர்களுக்கு நினைவூட்ட வேண்டியதில்லை. இந்த மகத்தான திருப்பணி ஒருவர் இருவர் அல்லது ஓர் கூட்டத்தவர் செய்துமுடிக்கற்பாலதன்று. அதுவுமன்றி ஓர் சிலர் மாத்திரம் ஈடுபட்டுச் சாதிப்பது உசிதமுமன்று. சைவசமயிகள் யாவரும், எல்லோரும் இறைவன் குழந்தைகள். இறைவனுக்குத் திருக்கோயிலெழுப்புவது எல்லோரதும் கடமையென உணர்ந்து இத் திருப் பணிக்குக் கைகொடுத்து இம் மானிடப்பிறவிப் பயனை அடைவார்களாக. [illegible]

மவன் கடவுளின் திருவருளுக் காளாகின்றான்.

இனி, மேற் கூறிய நான்கு மார்க்கங்களேயன்றி வேறுமோர் நெறியுண்டு. அதனை அகமார்க்கம் என்பர். இது ஏனை நாலகு மார்க்கங்களிலும் பார்க்கக் கடினமானதாகத் தோன்றினும் மக்களிற்சிலர் இதனைக் கைக்கொண் டொழுகித் தாம டைய விரும்பிய செம்மை நெறியை யடைந்துள்ளார்கள். இந்த அகமார்க்கத்திற்கோர் வழித்துணையாய் மிளிர்வது எம்மம்மையாகும் மலையரசன் மகளாரின் தவ நெறியேயாகும்.

பச்சைக் குழந்தையின் பசுங்குடர் பொறுதெனத் தானே மருந்தை யுண்டு பத்தியங் காத்துப் பின் அமுதம போன்ற தன் பாலால் தன் குழவியின் பசியையும் நோயையும் போக்குமன்புள்ள தாயே போன்று, மலையரசனுக்கு மகளாய்த்தோன்றித தவமாற்றி ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமகனை சிவபெருமானைத் தனது வரனுகப் பெற்று உலகியல் நெறியை விளக்கிக் காட்டியவர் எங்கள் உமையம்மையேயன்றோ!

அண்டகோடிகளையும் ஆங்காங்கே வசிக்கும் சீவராசிகளையுமபெற்றும் இன்றும் பாலமொழிக் கன்னியாய் நிற்பவா உமையம்மை. ஈசுவரன் பிரமச்சாரியே. இவர்கள் திருமணத்தால்உமையம்மையின் கன்னிமைக்கோ அன்றி ஈசுவரனின் பிரம்மசாரிய நிலைக்கோ ஒருவித பங்கமும் வரவில்லை. இவர்கள் இந்த நிலையிலிருப்பது ஓர் அளவிட முடியாத இரகசியம்.

எனினும் இவர்கள் இவ்வாறன நிலையிலிருப்பது இவர்களுக்கு எங்களுக்குண்டாயிருக்கும் ஊனயாக்கையைப் போன்ற யாக்கை யில்லாமையாலேயாம். இவர்களுக்குத் திருமேனியவர்கள் திருவருளேயாகும்,

இந்த அகமார்க்கம் மாயை படைத்த ஊனயாக்கையையுடைய மக்களுக்கோ மிகவுங் கடினமாயிருக்கும். எனினும் இம்மார்க்கத்தைக் கடைப்பிடித்துச செவ்வனேயொழுகிக் காட்டிய உத்தமர்களுமுண்டு. பாரதமாதாவின மகளாயுதித்த இராமகிருஷ்ணரும் சாரதா தேவியும் இந்த மார்க்கத்தைப் பூரணமாக மக்களுக்கு விளக்கிக் காட்டியிருக்கின்றார்கள்.

இம்மார்க்கத்தில் நாயகிக்கு நாயகனே கண்கண்ட தெய்வம் ஆயின் இது பெண்களுக்குத்தானுவெனின், ஆன்மாவிற்கு ஆண் பெண் என்னும்பேதமில்லையாதலின் இம்மார்க்கம் எல்லோருக்கும்உரித்தானதே. எவ்வாறு கற்புடைய மங்கை தன் காதலனுடன் காகத்திருகண்ணுக் கொன்றேமணிபோன்று அன்னியமின்றி வாழ்கின்றாளோ, கணவன் நினைக்கத்தான் செய்கின்றாளோ, அப்படியே ஒரு சாதகனும் கடவுளோடொன்றித்தான் வேறு கடவுள் வேறு என்று எண்ணாது இருவர் ஆகத்தும் ஓருயிர் உலவுவது போன்று வாழ்வதேயாம. இதனையே இரண்டற்ற நிலையென்பர்.

இந்த உண்மைகளை ஐயந்திரிபற உணர்ந்த ஆசாரியர்கள் தமது சீடர்களுக்குச் சிறுவயதிற் றீட்சை செய்து கடவுளோடு அண்மையிலிருக்கின்றார்கள என்ற உணர்ச்சியைப் பெறச் செய்கின்றார்கள். இந்த நெறியில் ஒழுகுபவர் எவ்வாறு ஓர்கற்புடையபெண் தன் கணவன் பெயரைப் பிறர் கேட்குமாறு கூறமாட்டாளோ அதேபோல இறைவன் திருநாமங்களைத் தம் மனத்துட் செபித்தலேயன்றிப் பிறர் கேட்குமாறு கூறமாட்டார்கள்.

ஆண்களும் பெண்களும் தக்க பருவத்திலே சிவதீக்ஷை பெற்று இறைவன் திருநாமங்களை இடையறாது தியானித்து முறைப்படி செபித்து வருவார்களேயானல் இந்த அகமார்க்கம் அவர்களுக்கு இலகுவில் கைகூடுமென்பது திண்ணம். ஆதலால் சிவ வழிபாட்டைப் பிள்ளைகள் இளமையிலேயே பயிலத் தொடங்குவது அவசியமானது. அப்போதுதான் அரனையன்றி வேறுவரன் தமக்கில்லையென்ற மெய்யறிவு பெறுவார்கள்.

---

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### 4" டீசல் எண்ணெய்க்குழாய் அமைத்தல்

N. 2526 ஒரு டீசல் எண்ணெய்க் குழாய் அமைக்கவிருப்பதால, மருதானைப் புகையிரத நிலையத்துக்கும்உருகொடாவத்தைக்கும இடையில், 1 மைல் 40 சங்கிலியிலுள்ள புகையிரதக் கடவை போக்குவரத்து வாகனஙகளுக்குப் பின்வருமாறு மூடப்பட்டிருக்கும். 10 9-55 பி. ப. 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை; 11 9-55 காலை 4 மணி தொடக்கம் காலை 6 மணி வரை - இடையிடையே மூடப்பட்டிருக்கும். இந்நேரங்களில போக்குவரத்து வாகனங்கள் இப்புகையிரதக் கடவையாற் செல்ல உதவி செய்யப்படும். 10–9–55 இரவு 10 மணி தொடக்கம் 11–9–55 காலை 4 மணி வரை இக் கடவை முழுமையாக மூடப்பட்டிருக்கும், இந் நேரங்களில் போக்குவரதது வாகனங்கள் இங்கிறம வீதியாலும், கொலனுவை வீதியாலும அல்லது டெமறறக்கொட வீதியாலும் செல்லலாம்.

G. 30. 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டுவிற்பனவு விளம்பரம

சல்தான் அப்துல்காதர் அப்துல் காதரும்
பெண் சல்கா — வண்மேற்கு
வழக்காளிகள்
இல. 10388
எதிராக
மொகிதீன் அப்துல்காதர் மெகமது அப்துல் கரிம் பெண் சய்நாம்பு — வண் மேற்கு.
எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 10388 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1955-ம் ஞு ஐப்பசி மீ 15 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபா 2667-26 ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 100 க்கு 5 வீத வட்டியும்.

காணி விபரம்

வண்ணார்பண்ணை மேற்கில் பம்மை வெளியும் புளியடியும் என்னும் காணி கி இ 2 குளி 16 3/8 வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் பனைகளும்.

எல்லை கிழக்கு M. A. M. அப்துல் காதரும் மறுபேரும

வடக்கு M. A. M. அப்துல் காதரும் முகமது அப்துல் காதர் பெண் மூக்குறு உம்மாவும்

மேற்கு N. M. மொகமது மீராசாய்பு பங்காளரும்.

தெற்கு பவாமுகிதீன் பெண் மொகமது சல்தான் உமா ரூேட்டும் இவை அடங்கலிலும் சொரியலாக அரைவாசி.

வ. அ. துரையப்பா
Jaffna 30-8-55
M 122 2-9 (௹ 100)

## கோட்டு விற்புனவு விளம்பரம்

காரைநகர் புதுரேட்டு
சின்னத்தம்பி பத்மனுதன்
இல. 10641
வழக்காளி
எதிர்
1 பரித்தித்துறை எக்சைஸ் கந்தோர் விசுவலிங்கம தியாகராசா
2 நலலூர் அவர் மனைவி கனகாம்பிகை

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10641-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி. பினனல் விபரிக்கப்படும இரு துண்டுக்காணிகள் 1955 ஞு ஐப்பசி மீ 4 ம் உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக யாழ்ப்பாணப் பகுதி நலலூரிறை சிங்கத்தின் வளவும் மாதன் வளவும் அனுமான் வளவும் குளி 12 3/5 ம் வீடும் பயிர்வகைகளும் கிணற்றுப் பஙகும், எல்லை கிழக்கு திருநாவுக்கரசு பெண் மனோன்மணிக்குடையவாதனம், வடக்கு முடிக்குரிய காணி, மேற்கு 2-ம் காணி தெற்கு கையொழுங்கை, இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளும், இக்காணி D 204/187 ம் புத்தகத்தில பதியப்பட்டிருக்கிறது.

2 ஷை இறை, சிஙகத்தின வளவும. மாதனவளவும், அனுமான் வளவும் கி பரப்பு ஒன்றும் கல்வீடும் கிளக்கெலேயிலிருக்கும கிணற்றில் பஙகும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு 1ம் காணியும் மறுபேருக்குமுடையவாதனங்களும், வடக்கு அக்கிணற்றுக்குப் போகும் 6 முள அகலமுள்ள வளிப்பாதை மேறகு கந்தையா பெண் செல்லமாவுக்குடையவாதனம் தெற்கு நாகமுத்து கதிரவேலுவுக்குடைய வாதனமும் கையொழுஙகையும், இக்காணியடங்கலும. ஆதக்காணி D 180/241ம் புத்தகத்தில் பதியப்பட்டிருககிறது.

செ. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
51, 4th Cross Street,
Jaffna,
26—8—55.
M 121 2-9 (௹ 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
1. காலஞ்சென்ற அம்பலவாணர் முருகேசு பெண் சரசுபதிப் பிள்ளையின் ஆதனங்களின் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டுத் தத்துவ வழக்கு இல. 699 ல் தத்துவகாரி காரைநகர் மேற்கு இராமனுதர் கைம்பெண் பாறுபதிப்பிள்ளை
வழக்காளி
மயினர் 2 ஷையூர் அம்பலவாணர் முருகேசு மகள் முத்துலட்சமி
3. இரண்டாம் வழக்காளியின் பாரபரிப்புக்காரன் ஷையூர் அம்பலவாணர் முருகேசு.
கூட்டுவழக்காளிகள்
எதிராக
இல. 8711

1. காரைநகர் மேற்கு தற்பொழுது மலாயா இராமனுதர்முருகேசு
2. ஷையூர் பெண் பொன்னம்மா. —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 8711ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னல் விபரிக்கப்படும்நான்கு துண்டுக் காணிகள் 1955ம் ஞு புரட்டாசி மீ 17ம் திகதி சனிக்கிழமை முற்பகல் எட்டு (8) மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா: 5041/=ம் ரூபா: 4000/— க்கு 18-3-52 தொடக்கம் 9-6-54 வரை 3 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவும் இதில் ரூபா 1000/— கோட்டில் 21.6-54ல் கட்டப்பட்டது

காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று தங்கோடை யிறை "தச்சன் வயல்" பா. செ இல. 8 குளி 11ம் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப் பாகமும தூர்வை வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கி நாகேசு பெண் தெய்வானைக்குரியவாதனம் வடக்கு இராமனுதர் முருகேசு விற்கும் வேலாயுதர் சந்தருக்கும் உரிய ஆதனம். மேற்கு அம்பலவாணர் பெண் சின்னக் குட்டிக்கும் சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சுந்தரம்மாவிற்கும் உரிய ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் சுந்தரமமாவிறகுரியவாதனம். இதடஙகலும.

(2) ஷை யிறை "கிராவத்தை" பா. செ இல. 12 எல்லை கிழக்கு இரண்டாம் எதிராளிக்கும் சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சுந்தரம்மாவிற்கும் உரியஆதனம், வடக்கு சுந்தப்பர் வேலுப்பிள்ளைக்குரியவாதனம். மேற்கு சபாபதி முருகேசுவிற்கும் ஆறுமுகம் கைமபெண் விசாலாட்சிககும் உரிய காணிகள். தெற்கு முருகேசு பெண் தெய்வானைக்குரிய வாதனம். இதடஙக லும்.

(3) ஷையிறை "கிராவத்தை" பா. கி இல. 6ம் செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும் கிணறும் எல்லை கிழக்கு கந்தர் வேலுப்பிள்ளைககுரியவாதனமும் ஒழுஙகை முடிப்பும் இராமனுதர் காசிநாதரினுதனமும், வடக்கு சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சுந்தரம்மாவின ஆதனம். மேறகு மேற்சொல்லிய இரண்டாம ஆதனம் தெற்கு எதிராளிக்குரியவாதனமும் பரமசாமி தெட்சணமூர்த்திக்கும் பஙகாளருக்கும் உரிய ஆதனமும். இதடங்கலும

(4) ஷை யிறை "மணிவிலாக்கை" பா. கி. இல 10 ஆனல் அளவின்படி பா. கி இல 12 குளி 13½ம் பனைகள வடலிகள் தென்னைகளும் எல்லை கிழக்கு சண்முகம் முருகேசுவின் உரிமைக்காரருக்கும் பஙகாளருக்கும் உரிய ஆதனம். வடக்கு சின்னக்குட்டி கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்குரிய வாதனம். மேற்கு [illegible] தெற்கு இறந்துபோன சரசுபதிப்பிள்ளையின் உரிமைககாரருக்குரிய வாதனம். இதடஙகலும்.

1955ம ஞு ஆவணி மீ 3உ
[illegible]
M 120 2-9 (௹ 300)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 7/C
சிவசிதம்பரம் கந்தசாமி
சிறுபிள்ளையின் ஆதனத்துக்கு
தத்துவகாரி
சிவசிதம்பரம் கைம்பெண்
தில்லைப்பிள்ளை
திருநெல்வேலிகிழக்கு

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 7/C ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ஞு ஐப்பசி மீ 1 உ சனிசகிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சிதம்பரன் குடியிருப்பும் மறுபிரிவுகளும் என்னும் காணி கி இ. 2 குளி 17

எல்லை கிழக்கு சண்முகம் சபாரத்தினத்தின் ஆதனம்.
வடக்கு கந்தையா பெண் கமலாம்பிகையின் ஆதனம்.
மேற்கு ஒழுஙகை
தெற்கு தர்மசாதன நிலம்.
இதில் சொரியலாக அரைவாசி.

வ. அ. துரையப்பா
யாழ்ப்பாணம் கொமிஷனர்.
28-8-55.
M 123 2-9 (௹ 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காம்பன் S. வயித்தியனுதர்
நடராசா — வழக்காளி
இல. 11620
எதிராக
1. நாரந்தனை பொன்னர் மாணிக்கமும்
2. ஷை பெண் பூமணியும்
3. ஷை முருகப்பர் கந்தையா
எதிராளிகள்


யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11620 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும துண்டுக்காணி 1955 ஞு புரட்டாதி மீ 28 உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1983-50 ம் இதில ரூபா 1000/= க்கு 7-9-54 திகதி தொடக்கம் 11-1-55 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 18 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் 11-5-55 தொடக்கம் இறக்கும்வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 207-77.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோயிற்பற்று நாரந்தனை இறை வேடடையர்காடும் சண்டைக்காடும் நிலப்பரப்பு எட்டரை (8½) கிணறும் பனைகள் வடலிகள் தென்னைகள் வீடுகளும் எல்லைகிழக்கு பஸ்தியாம்பிள்ளை அர்தோனிப்பிள்ளை வடக்கு கந்தையா பெண் தெய்வானைப்பிள்ளை மேற்கு ஒழுங்கை தெற்கு வெலிசசோர் பெண் அன்னமுத்து இடஙகலும்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்.
காரைநகர்,
20-8 55.
M 119 2-9-55. (௹ 100)




## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஞூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
6163,13,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுஙகுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

## திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை

திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையின் ஏழாவது வருடாந்தக் கூட்டம் பபலபபிட்டி பழைய கதிரேசன் கோயில் மண்டபத்தில கைத்தொழில் வீடமைப்பு சமூக சேவா அமைச்சர் கௌரவ சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில நடைபெற்றது.

சபையின் கௌரவ காரியதரிசி திரு. எஸ். சிவசுப்பிரமணியம, வழக்கறிஞர் அவர்கள் சபையின் அறிக்கையைச் சமர்ப்பித்தார். சமர்ப்பித்துப் பேசும்போது இத்திருப்பணி எவ்வாறு சைவசமய வளர்ச்சி கலாசார முன்னேற்றம ஆதியவற்றுக்கு உதவுகின்றதென்பதை எடுத்துக் காட்டினர்.

தலைவர் அவர்கள் பேசும் போது திருக்கேதீஸ்வர நாதருக்குப் பூசை வழிபாடுகளெல்லாம சிறப்பாக நடக்கின்றன ஆனல் திருப்பணி வேலை அவ்வளவு திருப்தியாய் நடக்கவில்லை என்று குறிப்பிட்டு அன்பர்களின் உதவியை வேண்டினர்.

திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலுக்கு அருகிலுள்ள காணிகளை அரசாங்கத்திடம குத்தகையாக வாங்கி திருக்கேதீஸ்வரத் திருத்தொண்டுகளில் ஈடுபடக்கூடிய சைவநன்மக்களைக் குடியேற்றவேண்டுமென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது. புது வருட நிருவாகசபை தெரிவுசெய்யப் பெற்றதோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai, Jaffna on Friday September 2 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org